# ***கீரமங்கலம் வகை சாதுச் செட்டியார் சங்கம்***

*மாநில சங்க அலுவலகத்தின் முகவரி* : *ஞானம்பாள் இல்லம்*, 69, *சார்லஸ்நகர்*-1, *புதுக்கோட்டை* – 622055.

## நோக்கங்களும் – அடிப்படை விதிமுறைகளும்

**நோக்கங்கள்** :

1. *உலகெங்கிலும் வாழும் கீரமங்கலம் வகை சாதுச் செட்டியார்களை ஒருங்கிணைப்பதும் அவர்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடுதலும்.*
2. *நம் சமூக மக்கள் கல்வி, தொழில், மேம்பாடு அடைய உதவி செய்தல், வேலை வாய்ப்பு வழிமுறைகளை இளைஞர், இளைஞிகளுக்கு வழிகாட்டுதல், நம் சமூக குடும்ப பொருளாதாரத்தை உயர்த்துதல்.*
3. *நம் சமூக மக்களின் முன்னேற்றத்திற்க்காக கல்வி நிறுவனங்கள், வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் நிறுவதல்.*
4. *நம் சமூகத்தைச் சேர்ந்த ஏழை, எளியோர், மாற்றுதிறனாளிகளுக்கு கல்வி, மருத்துவம், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்.*
5. *நம் சமூக மக்களுக்கு மத்திய மாநில அரசுகளிடமிருந்து சமூக நீதி, பாதுகாப்புகள், உரிமைகள் கிடைக்க பாடுபடுதல்.*
6. *நம் சமூக மக்களில் ஏழ்மையில் உள்ளவர்களின் திருமணங்களுக்கு உதவுதல்.*
7. *நம் சமூக மக்களின் மேம்பாட்டிற்க்காக சங்கத்தின் நிதி ஆதாரத்தை பெருக்கி அதன் மூலம் மேலே கூறிய இலட்சியங்களை அடைதல்.*
8. *நிதி ஆதாரத்தை பெருக்க நன்கொடை வசூலிப்பது, உறுப்பினர்களிடமிருந்து சந்தா வாங்குதல், சங்க பணத்தை மிகவும் நம்பகமானவரிடம் வட்டிக்கு விட்டு பணத்தை பெருக்குதல், சங்கத்திற்கு பரிசு பொருட்கள் மற்றும் அன்பளிப்புகள் பெறுதல்.*

9. சங்கத்தின் வருமானத்தையும், சொத்துக்களையும் முழுமையாக சங்க வழிகளுக்கு உட்பட்டு சங்க வளர்ச்சிக்கு உபயோகிக்க வேண்டும். சங்க பொறுப்பில் இருப்பவர்கள் தன் சுய இலாபத்திற்காக தன் சார்ந்தோர்களின் இலாபத்திற்காகவே சங்க பணத்தையோ, உடமையையோ நேரிடையாகவோ மறைமுகவோ பயன்படுத்தக்கூடாது.
10. திருமணகூடம் கட்டி வருவாய் உயர்த்துதல், நம் சமூக ஏழைகளின் திருமணத்திற்கு இலவசமாக திருமணக்கூடத்தை வாடகையின்றி கொடுத்தல்.
11. உண்மையான கணக்கை வைத்திருப்பதுடன் வரவு – செலவுகளுக்கு ரசீது, பில், cash voucher போன்ற சரியான முறையில் நிர்வாகம் செய்து வருடா வருடம் வரவு செலவுகளை காட்டி பாலன்ஸ் ஷீட் மாநில சங்கம் மாநில செயற்குழுவிலும், கிளை, சங்கங்கள் பொதுக்குழுவிலும் ஒப்புதல் வாங்கவேண்டும்.
12. சங்கத்தின் தேவை என நினைத்தால் அசையும் – அசையா சொத்துக்களை வாங்குதல், வாடகை விடுதல், குத்தகை கொடுத்தல் என சங்கத்திற்கு அனுகூலமானவற்றை செய்தல்.
13. ஐந்து ஆண்டுகளுக்கு நம் சமூக அனைத்து மக்களையும் ஓரிடத்தில் ஒருங்கிணைத்து மாநில மாநாடு நடத்துதல்.

***<u>விதிகள்</u>*** :

1. கீரமங்கலம் வகை சாதுச் செட்டியார் இனத்தில் பிறந்து 18 வயது நிரம்பிய எந்த ஒருவரும் நம் சங்கத்தின் உறுப்பினர் ஆக முடியும்.
2. உறுப்பினர்கள் சேர்க்கையை கிளை சங்கங்களே சேர்க்க முடியும். மாநில சங்கம் நேரிடையாக எந்த உறுப்பினரையும் சேர்க்க இயலாது.
3. கீரமங்கலம் பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, அறந்தாங்கி, பேராவூரணி, சென்னை, கொத்தமங்கலம், தஞ்சாவூர், வலைங்கமான்,

பாப்பாநாடு, ஆலங்குடி, அனவயல், திருப்பூர், சிங்கப்பூர், திருச்சி ஆகிய ஊர்களில் கிளை சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிதாக ஒரு ஊரில் கிளை சங்கம் தொடர்பாக குறைந்தபட்சம் 20 குடும்பங்கள் அங்கு வசிக்க வேண்டும். புதிதாக கிளை சங்கங்கள் உருவாக மாநில சங்கம் ஒத்துழைப்பு செய்ய வேண்டும்.

4. புதிதாக கிளை சங்கங்கள் உருவாகும் போது அந்த கிளை சங்க அவர்களின் எல்லையை மாநில சங்கம் உருவாக்கும்.
5. மாநில சங்கம் எந்த ஒரு தனி உறுப்பினருக்கு நிதி உதவியையோ, பொருள் உதவியையோ செய்ய கூடாது. ஒரு உறுப்பினர்க்கு உதவி தேவைப்பட்டால் அவர் அந்த கிளை சங்கத்தின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கைகளை மட்டும் மாநில சங்கம் பரிசலனை செய்யும்.
6. ஒரு கிளை சங்கத்தின் பண உதவி பொருள் உதவி மற்றொரு கிளை சங்கத்திற்கு தேவைப்பட்டால் அந்த கோரிக்கையை மாநில சங்கம் பரிந்துரையின் வாயிலாக தான் கிளை சங்கங்கள் செய்ய வேண்டும்.
7. கிளை சங்கத்தின் உறுப்பினர்கள் சந்தா தொகை ஆண்டுக்கு ரூ.200க்கு குறையாமலும் ரூ.1000க்கு மிகாமலும் இருக்க வேண்டும். இது அடுத்த மூன்று வருடங்களுக்கு நடை முறையில் இருக்கும் அதன்பின் மாநில செயற்குழு குறைந்தபட்ச தொகை மற்றும் அதிக பட்ச தொகையை முடிவு செய்து கிளை சங்கத்திற்கு தெரிவு செய்யும்.
8. கிளை சங்கம் மற்றும் மாநில சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளின் பதவி காலம் மூன்று ஆண்டுகளாகும், ஏதாவது ஒரு முக்கிய காரணத்தால் மூன்று ஆண்டுக்குள் புதிதாக நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கபட முடியவில்லை எனில் செயற்குழு ஒப்புதலுடன் அதிகபட்சம் 6 மாதங்கள் வரை நீடிக்கலாம்.

9. சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு மீறி சங்கத்தின் ஒற்றுமையையும், நற்பெயரையும், ஸ்திரத் தன்மையையும் குலைக்கும் வகையில் ஒருவரின் நடத்தை அமைந்திருந்தால் அவரை தற்காலிகமாக நீக்கி, அவரின் வரம்பு மீறல்களை குறிப்பாக சுட்டிக்காட்டி அவருக்கு கடிதம் எழுதி, அது கிடைக்கப்பெற்ற '30' நாட்களுக்குள் விளக்கத்தை வழங்கும்படி கோர வேண்டும். அப்படி அளிக்கப்பட்ட விளக்கம் கிளைசங்க செயற்குழுவில் விவாதிக்கப்பட்டு அந்த விளக்கம் திருப்தியாக அமைந்தால் மீண்டும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளளாம் அப்படி திருப்தியாக அமையாத பட்சத்தில் செயற்குழு தன்னுடைய வழக்கமான கூட்டத்திலோ, அல்லது விவாதிக்க கூட்டப்பட்ட கூட்டத்திலோ பெரும்பான்மை செயற்குழு உறுப்பினர்களின் கூற்றுப்படி சங்கத்திலிருந்து அதிகபட்சம் 1 வருடத்திற்கு நீக்கி வைக்கலாம். அப்படி நீக்கப்பட்ட காலத்தில் அவர் எந்த ஒரு பொறுப்பையும் வகிக்கவோ, தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ தகுதி இழந்தவராக இருப்பார்.
10. மாநில சங்கம் எந்த கிளை சங்கத்தின் உறுப்பினர் மீது நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. அவர் சார்ந்த கிளை சங்கத்திற்கு கடிதம் வழியாக நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்ய முடியும். தேவையா, இல்லையா எந்த மாதிரி நடவடிக்கை என்பதையெல்லாம் கிளை சங்க நிர்வாகக்குழு தான் முடிவு செய்யும்.
11. கிளை சங்கம் மற்றும் மாநில சங்கம் தனக்கு தேவையான ஆலோசகர்களை நியமித்துக் கொள்ளலாம். அப்படி நியமிக்கப்பட்டதும் ஆலோசகர்களின் எண்ணிக்கை 6-க்கு மிகாமல் இருக்க வேண்டும் அப்படி ஆலோசகர்களை நியமிப்பது, நியமிக்காமல் இருப்பதும் எத்தனை நபரை நியமிக்கலாம் என்பதை மாநில நிர்வாக

குழு/கிளை சங்க செய்ற்குழுவின் பெருபான்மைபடி முடிவு செய்யலாம்.

12. கிளை சங்கம், மாநில சங்கம் நிர்வாக வசதிக்காக தங்களுக்கு குழுக்களை அமைத்துக் கொள்ளலாம் அப்படி அமையும் குழுவில் 80% சதவீதம் குறையில்லாமல் நிர்வாகக்குழு, செயற்குழு, மற்றும் ஆலோசகர்களின் பங்கு இருக்க வேண்டும் அப்படி அமையும் குழுக்களின் எண்ணிக்கை 6-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
13. மாநில சங்க நிர்வாகிகள், கிளை சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் சங்க கூட்டங்களில் எந்த ஒரு நமது சங்க கூட்டத்தில் அரசியல் பேசுவதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.
14. சிங்கபூர், மலேசியா தவிர மற்ற வெளிநாடு மற்றும் இந்திய மாநிலங்களில் வசிக்கும் நம் சமுகத்தினர் சென்னை கிளை சங்கத்துடன் அல்லது அவர் சொந்த ஊரின் கிளை சங்கத்துடன் சேர்ந்து செயல்படுவார்கள். அதேப் போல் திருவள்ளூர், காஞ்சிபுரம் போன்ற வட தமிழக மாவட்டங்கள் மற்றும், கேரளா தவிர மற்ற இந்திய மாநிலங்களில் வசிப்பவர்களும் சென்னை சங்கத்தின் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
15. கொங்குமண்டலம் என்று அழைக்கப்படும் மேற்கு தமிழக மாவட்டங்களில் மற்றும் கேரளாவில் வசிப்பவர்கள் திருப்பூர் கிளை சங்கத்துடன் இணைந்து செயல்படுவார்கள்.
16. நாகை, திருவாரூர் கும்பகோணம் போன்ற டெல்டா மாவட்டங்களில் வசிப்பவர்களை தஞ்சாவூர் கிளை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
17. சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற (மதுரை தவிர்த்து) தென் தமிழக மாவட்டங்களில் வசிப்பவர்கள் புதுக்கோட்டை கிளை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் செட்டியாபட்டி போன்ற அருகில் உள்ள பகுதியும் புதுகை கிளை சங்கத்தில் வரும்.

18. பாதிரங்கோட்டை, திருச்சிற்றம்பலம் போன்ற பட்டுக்கோட்டை கிளை சங்கத்திற்கு அருகே உள்ள ஊர்களில் வசிப்பவர்கள் பட்டுக்கோட்டை கிளை சங்கத்தில் சேர்க்கப்படுவார்கள்.
19. மாங்குடி போன்று அறந்தாங்கி கிளை சங்கத்திற்கு அருகே ஊர்களில் வசிப்பவர்கள் அறந்தாங்கி கிளை சங்கத்தில் சேர்க்கப்படுவார்கள்.
20. கீரமங்கலம் – வேம்பங்குடி (மேற்கு) ஒருங்கிணைந்த ஒரே கிளை சங்கமாக செயல்படும் வடக்கிகாடு போன்று கீரமங்கலம் கிளை சங்கத்திற்கு அருகே உள்ள ஊர்களில் வசிப்பவர்கள் கீரமங்கலம் கிளை சங்கத்தில் சேர்க்கப்படுவார்கள்.
21. பழைய பேராருவூணி, செங்கமங்கலம் காலகம், கொன்னைக்காடு போன்று பேராவூருணி அருகே ஊர்களில் வசிப்பவர்கள் பேராவூருணி கிளை சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
22. கைகாட்டி, ஆவணம், மாங்காடு போன்ற அனவயல் அருகே ஊர்களில் வசிப்பவர்கள் அனவயல் கிளை சங்கத்தில் சேர்ந்து செயல்படுவார்கள். இதேப்போல் அந்தந்த கிளை சங்கங்கள் தாங்களின் ஊர் அருகே வசிப்பர்களை தங்கள் சங்கத்தில் சேர்த்து செயல்பட வேண்டும்.
23. சிங்கபூர் கிளை சங்கத்துடன் மலேசியாவில் வசிப்பவர்கள் சேர்ந்து செயல்படுவார்கள்.
24. வலங்கைமான் சங்கத்துடன் நீடாமங்களம் வட்டத்தில் வசிப்பவர்கள் சேர்ந்து செயல்படுவர்கள்.
25. திருச்சி கிளை சங்த்துடன் மதுரையில் வசிப்பவர்கள் சேர்ந்து செயல்படுவார்கள்.
26. இதன் நோக்கமே நம் சமுதாயத்தை சேர்ந்த ஒவ்வொருவரையும் எதாவது ஒரு கிளை சங்க உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்பது தான் இதன் மூலம் நமது சரியான நம் மக்கள் தொகை தெரிவதோடு ஒருங்கிணைந்து ஒற்றுமையாக, பாதுகாப்பாக, நமது உரிமை பெறுவதற்கு பாடுபட ஏதுவாக அமையும்.

27. *கிளை சங்கங்கள் நிர்வாக குழு அடிப்படை விதிகளில் தேவையான மாற்றங்களை செய்ய விரும்பினால் மாநில நிர்வாக குழுவிற்கு பரிந்துரை செய்யலாம். அதை மாநில நிர்வாக குழு கூட்டத்தில் விவாதித்து மாநில முதன்மை செயற் குழுவில் சமர்பிக்கும்.*

**28.** *சங்கத்தின் விதிமுறைகளில் புதிதாக விதிகளை சேர்க்கவோ, நீக்கவோ, மாற்றவோ, திருத்தவோ மாநில நிர்வாகக் குழுவிற்கு பரிந்துரை செய்யலாம். ஆனால் அவற்றுக்கு மாநில முதன்மை செயற்குழுவில் ஒப்புதல் வாங்க வேண்டும்.*

*அதன்படி ஒப்புதல் பெற குறைந்தபட்சம் 3-ல் 1 பங்கு மாநில முதன்மை செயற் குழு உறுப்பினர்கள் வருகை தந்திருக்க வேண்டும் மாற்றுக் கருத்து எற்பட்டால், வாக்கெடுப்பு மூலம் விதிகளை திருத்துவது, புதிதாக சேர்ப்பது, நீக்கம் செய்வது, போன்றவை செய்யலாம்.*

## ***<u>கிளை சங்கங்களின் விதிமுறைகளும், அதிகாரங்களும்</u>***:

1. *கிளை சங்கங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட நமது சமுகத்தினரை சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கும் முழு உரிமை உண்டு.*
2. *தன் உறுப்பினரிடமிருந்து ஆண்டு சந்தா தொகையை வசூலிக்கும் உரிமை உண்டு.*
3. *கிளை சங்கத்தின் நிதி ஆதாரத்தை பெருக்க சட்ட வரம்புக்குள் உட்பட்டு நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்ள உரிமையுண்டு.*
4. *கிளை சங்கங்கள் மற்ற கிளை சங்க உறுப்பினர்களிடமிருந்து கிளை சங்கத்திடமிருந்தோ நேரடியாக நிதி ஆதாரத்தை பெற முடியாது. மாநில சங்கத்திடம் கோரிக்கையை வைத்து கோர வேண்டும்.*

**நிர்வாகிகள்**:

கிளை சங்கங்களின் நிர்வாகிகள்

1. தலைவர் - 1
2. செயலாளர் - 1
3. பொருளாளர் - 1
4. துணைத்தலைவர்கள் - 2
5. இணைச் செயலாளர்கள் - 2
6. செயற்குழு உறுப்பினர்கள் – (குறைந்தபட்சம் 6 பேர் முதல் அதிகபட்சம் 30 பேர் வரை) செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை கிளை சங்க நிர்வாக குழு முடிவு செய்யும்.

**கிளை சங்க செயற்குழு**:

கிளை சங்க செயற்குழு என்பது, கிளை சங்க நிர்வாக குழு, ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்களை உள்ளடக்கியது செயற்குழு மாதம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும். தொடர்ந்து ஒருவர், மூன்று செய்ற்குழு கூட்டத்திற்கு வராதபட்சத்தில் அவரை அந்த பதவியிலிருந்து நீக்கும் உரிமை கிளை சங்க முதன்மை குழுவிற்கு உண்டு.

**கிளை சங்க நிர்வாகக் குழு**:

கிளை சங்க நிர்வாக குழு என்பது தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர்கள், இணைச்செயலாளர்கள், ஆலோசர்களை உள்ளடக்கியது.

**கிளை சங்க முதன்மை நிர்வாக குழு**:

கிளை சங்க தலைவர், கிளை சங்க செயலாளர், கிளை சங்க பொருளாளர் மூவரையும் அடக்கி குழுவிற்கு கிளை சங்க முதன்மை நிர்வாக குழு என்று அழைக்கப்படும்

**குழுக்கள்**:

சங்கத்தின் நோக்கம் நிறைவேற்ற குழுக்கள் அல்லது பிற சட்டப்பூர்வமான அமைப்புகளை அமைத்து குழுவிற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதுப் பற்றி கிளை சங்க நிர்வாக குழு முடிவு செய்யும். அந்த குழுக்கள்

தங்களது விளக்கங்களையும் செயல்பாட்டையும் கிளை சங்க முதன்மை குழுவிடம் தெரிவிக்கவும் – கிளை சங்க முதன்மை குழு தேவையான வழிக்காட்டுதலையும், குழுவின் பரிந்துரையை முழுவதுமாக ஏற்பதும் பகுதியாக ஏற்பதும், நிராகரிப்பதும் கிளை சங்க முதன்மை நிர்வாகிகளுக்கு உரிமை உண்டு.

***நிதி***:

*கிளை சங்கம் சட்டப்பூர்வமாக தங்களது சங்கத்தினை நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்ள உரிமை உண்டு. எந்த வழியில் நிதி ஆதாரத்தை பெருக்குவது என்பதை செயற்குழுவில் பேசி முடிவு செய்ய பட வேண்டும். சங்கத்தின் நிதியை முதலீடு செய்யவோ அல்லது வேறு முறையினால் நிதியை பெருக்கவோ கிளை சங்கத்தின் முதன்மை நிர்வாக குழுவிற்கு உரிமையுண்டு.*

***இரட்டை உறுப்பினர்***:

*ஒரே உறுப்பினர் இரண்டு கிளை சங்கங்களில் உறுப்பினராக இருப்பதே முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். ஆனால் வெளி நாட்டில் வசித்து வரும் உறுப்பினர் தான் சொந்த ஊரில் உள்ள கிளை சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம், அல்லது சென்னை கிளை சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம்.*

***வலையில் சங்கம்***:

*கிளை சங்கங்கள் தங்களுக்கென* Internet*–ல்* Webpage *தொடங்கி உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நடத்தலாம். அதற்கான குழுவை அமைக்க நிர்வாகக் குழுவுக்கு உரிமை உண்டு. மாநில நிர்வாகத்தின் செயல்பாடுகளையும், மற்ற கிளை சங்கங்களின் சிறப்பான செயல்பாடுகளையும் அதில் தெரிவிக்கலாம்.*

***வாட்ஸ் ஆப் பகரி***:

*தேவையான கிளை சங்க சார்பாக வாட்ஸ் ஆப் குருப்களை ஆரம்பித்து உறுப்பினர்களுக்கு உடனுக்கு உடன் சங்க செய்திகளை சேர்க்கலாம். தேவையில்லாத பதிவுகளை தவிர்க்க வழியுறுத்தவும், தேவையென்றால்,*

*குறிப்பிட்ட எந்தவொரு உறுப்பினரை நீக்க கிளை சங்க முதன்மை குழுவிற்கு உரிமை சங்க உண்டு. அட்மின் யார் யார் என்பதையும் கிளைசங்க முதன்மை நிர்வாக குழு முடிவு செய்யவும்.*

***<u>புத்தகம்</u>*:**

*கிளை சங்கங்கள் தங்களுக்குகென அறிவுசார்ந்த புத்தகமோ, முகவரி கையேடோ அல்லது உறுப்பினர்களுக்கு பயன் அளிக்கும் வகை எந்த புத்தங்களையும் வெளியிட உரிமையுண்டு. கிளை சங்க செயற்குழுவில் புத்தகம் வெளியிட ஒப்புதல் பெற வேண்டும். புத்தகம் எப்படி எப்படியெல்லாம் வர வேண்டும் என்பதையும் செயற் குழுவில் விவாதித்து செயல்பட வேண்டும், அந்த புத்தகத்தில் 2 பக்கங்கள் மாநில நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் ஒரு பக்கத்தில் மாநில தலைவரின் அணிந்துரை மற்றும் வாழ்த்து மடலும் மற்ற பக்கத்தில் மாநில நிர்வாக குழுவில் உள்ளவர்களின் பெயரையும் அவர்கள் வகிக்கும் பதவியையும் குறிப்பிட வேண்டும்.*

***<u>உறுப்பினர் நலன்</u>*:**

*கிளை சங்கங்கள் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, மருத்துவம் என சகலவழிகளும் உதவும் பொருட்டு திட்டங்கள், முகாம்கள், வழிகாட்டிகளை அமைத்து சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தலாம்.*

*கிளை சங்கத்திலிருந்து மாநில பொறுப்பிற்கு தேர்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மாநில பொறுப்பில் உள்ள ஒருவர் மீது கிளை சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் அது குறித்து கிளை சங்க செயற்குழுவில் முடிவு செய்து மாநில சங்கத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் பெற்ற பிறகே ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும்.*

*__நிதி ஆண்டு__* :

*சங்கத்தின் வரவு – செலவு இருப்புக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1ம் தேதி தொடங்கி அடுத்து வருகிற மார்ச் 31ம் தேதி முடிய பராமரித்து தணிக்கை செய்யவேண்டும்.*

*__ஆண்டு பொதுக்குழு__* :

*கிளை சங்கள் தங்களின் ஆண்டு பொதுக்குழுவை ஆண்டுக்கு ஒரு முறை நடத்த வேண்டும். செயற்குழு, நிர்வாகக் குழுவை விட அதிக அதிகாரம் ஆற்றல் படைத்தது பொதுக்குழு.*

*செயற்குழுவில் ஆண்டு பொதுக்குழு நடத்துவதற்கு தேதி நிர்ணயம் செய்த பிறகு மாநில சங்கத்திடம் அந்த தேதிக்கான ஒப்புதல் பெற வேண்டும். தேதி, இடம் தெரிந்தப்பிறகு குறைந்த்து 21 நாளுக்கு குறையாமல் உறுப்பினர்களுக்கு தெரிவிக்க வேண்டும். பொதுக்குழு நெருங்கும் நேரத்தில் உறுப்பினருகளுக்கு குறுஞ்செய்தி மூலமாகவோ, வாட்ஸ் ஆப் பகரி மூலமாகவோ ஆண்டு பொதுக்குழு நடக்கவிருப்பதை நினைவுப்படுத்தலாம்.*

*ஆண்டு பொதுக்குழுவிற்கு மாநில பொறுப்பாளர்களை அழைத்தல் வேண்டும் (தலைவர், பொது செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர்கள், இணைச் செயலாளர்கள்) முக்கியமாக மாநில தலைவர் , மாநில பொதுச் செயலாளர், மாநில பொருளாளரை ஆண்டு பொதுக்குழுக்கு அழைக்க வேண்டும். அவர்களை மேடையில் அமர வைக்க வேண்டும்.*

*கிளை சங்க செயலாளர் ஆண்டு அறிக்கை பொதுக்குழுவில் வாசித்து ஒப்புதல் பெற வேண்டும். கிளை சங்க பொருளாளர், அந்த ஆண்டு வரவு – செலவுகளை நகல் எடுத்து எல்லா உறுப்பினர்களுக்கும் நகல் வழங்க வேண்டும். பொதுக்குழுவில் பொருளாளர் வாசித்து பொதுக்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும்.*

*ஆண்டு பொதுக்குழுவில் சிறுவர், சிறுமிகள், பெண்கள், ஆண்கள் ஆகியோர்களுக்கு அவர்களின்*

*திறமையை வெளிகொணரும் வகையில் விளையாட்டு போட்டிகள் அறிவுப் போட்டிகள் நடத்திட கிளை சங்க நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.*

*ஆண்டு பொதுக் குழுவில் நடைப்பெறும் போது அதற்கு இடையூராகவோ, கண்ணியம் குறைவாக நடந்து கொண்டாலோ அல்லது மது அருந்தி வந்தாலோ, அவர்களை வெளியேற்றும் அதிகாரம் கிளை சங்க நிர்வாகக் குழுவிற்கு உண்டு. அடுத்த வரும் செயற்குழுவில் அதை பற்றி பேசி அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் பேசி அது அபாராதம் வசூலிப்பதாகவோ, தற்காலிக உறுப்பினர் நீக்கமாகவோ இருக்கலாம், அது என்ன என்பதை செயற்குழு முடிவு செய்யலாம்.*

*ஆண்டு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனைத்தும் கிளை சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில நிர்வாக்குழு உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும்.*

***<u>தீர்வு</u>*** :

*கிளை சங்க உறுப்பினர்கள் தங்கள் பிரச்சனைக்கு தீர்வுகாண் கிளை சங்க நிர்வாகிகளை அணுகலாம். ஒரே கிளை சங்கத்தை சேர்ந்தவர்களுக்கிடையே பிரச்சனையென்றால் அந்த குறிப்பிட்ட கிளை சங்க நிர்வாகக் குழு அதற்கான பாரபட்சமற்ற தீர்வை அளிக்கலாம், தேவை என்றால் அந்த பிரச்சனை தன்மைக்கேற்ப ஒரு குழுவை நியமித்து அதற்கு தீர்வு காணலாம்.*

*வெவ்வேறு கிளை சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்களைடையே எதாவது பிரச்சனையென்றால் கிளை சங்க நிர்வாகிகளுடன் மாநில சங்க நிர்வாகிகளும் சேர்ந்து அந்த பிரச்சனைக்கு தீர்வு காணலாம்.*

*குறிப்பிட்ட உறுப்பினரின் பிரச்சனை கிளை சங்கத்தில் தீர்க்க முடியாமல் போகும் நிலை ஏற்ப்பட்டால் அந்த உறுப்பினர் மாநிலத் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கலாம். மாநிலத்தலைவர் மற்றும் மாநில*

நிர்வாககுழு குறிப்பிட்ட கிளை சங்க நிர்வாகிகளுடன் கலந்து, மீண்டும் விவாதித்து நல்ல தீர்வை கொடுக்கலாம்.

## செலவு வரம்பு :

கிளை சங்க முதன்மை நிர்வாக குழு சங்கத்திற்க்காக செலவு செய்ய வேண்டி இருந்தால் ரூபாய்.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வரை கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு அதிகாரம் உண்டு. ரூ.25,000/- வரை செலவு செய்ய செயற்குழு ஒப்புதல் பெற வேண்டும் ரூ.25,000/-க்கு மேல் செலவு செய்ய ஆண்டு பொதுக்குழுவிடம் செலவு செய்வதற்கு முன்போ, செலவு செய்த பின்னோ ஒப்புதல் பெற வேண்டும்.

## கிளை சங்க செயற்குழு :

கிளை சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர்கள், இணைச் செயலாளர்கள், ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள் செயற்குழுவில் இடம் பெறுவர்கள். பொதுக்குழுவிற்கு அடுத்ததாக அதிக அதிகாரம் படைத்தது செயற்குழுவாகும்.

கிளை சங்க செயற்குழு குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை கூடும். செய்ற்குழு கூட்டத்திற்கு கிளை சங்க தலைவர், தலைமை வகிப்பார் அவர் இல்லாதபட்சத்தில் மூத்த துணைத்தலைவர் அல்லது தலைவர் எந்த துணைத் தலைவரை பரிந்துரைத்து சென்றாரோ அவர் தலைமை வகிப்பார். தலைவர் கலந்துக் கொள்ளாத அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டு தலைவரின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்படும்.

செயற்குழு கூட்டம் பற்றி கிளை சங்க செயலாளர், செயற்குழு உறுப்பினர்களுக்கு குறைந்த பட்சம் 3 நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட வேண்டும். அவசர செயற்குழு கூட்டம் தேவைப்படுவதாக கிளை சங்கத் தலைவர் கருதினால், அவசர செயற்குழு கூட்டம் ஒன்றை கூட்டும்படி செயலாளருக்கு தலைவர் கூற அதன்படி செயலாளர் அவசர செயற்குழு கூட்டத்தை கூட்டுவார்.

செயற்குழு கூட்டத்திற்கு தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் வருகை 3-ல் 1 பங்கு இருக்க வேண்டும் (33%) இந்த வருகை எண்ணிக்கை எட்டப்படாவிட்டால் எந்த அலுவலும் மேற்கொள்ளப்படாது. அக்கூட்டம் தலைவரால் மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டும்.

செயற்குழுவின் அலுவல்கள் நடவடிக்கை குறிப்பேட்டில் விவரமாக பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்படும், செயற்குழு கூட்டத்தில் பராமரிக்கப்படும், செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் அதில் கையொப்பமிட வேண்டும்.

கிளை சங்கத்திற்கு தேவையான அல்லது அவசியமான கட்டிடங்கள், வீடுகள் மற்றும் அசையா சொத்துக்களை வாங்குதல், அவற்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல், அவசியமான பொருட்களையும், சாதனங்களையும் வாங்குதல், கிளை சங்கத்தின் அலுவலகத்திற்க்காக கட்டிடம் வாடகைக்கு எடுத்தல் அவற்றுக்காக ரொக்கமாகவோ பிற வழிகளிலோ பணம் வழங்குதல் என்பது கிளை சங்க செயற்குழுவின் அதிகாரத்தின் கீழ்வரும்.

கிளை சங்கத்தின் நிதியை முதலீடு செய்யவோ அல்லது வேறு முறையில் கையாண்டு நிதியினை பெருக்க கிளை சங்க செயற்குழுவிற்கு உரிமையுண்டு.

நம் சமுதாயத்தில் சிறப்பாக தன் திறமையை வெளிகாட்டி உயர்ந்தவர்களுக்கு விருது வழங்க கிளை சங்க செயற்குழுவில் முடிவெடுத்து அந்த விருதினை ஆண்டு பொதுக்குழுவில் வழங்கலாம்.

செயற்குழுவில் கொண்டு வரப்படும் எந்தவொரு விஷயத்திலும் பெருபான்மை வாக்குகளின் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்படும், இருதரப்புக்கும் சமமான வாக்குகள் கிடைத்தால் மீண்டும் (இரண்டாவது முறை) வாக்கெடுப்பு நடத்த வேண்டும் ஒருவேளை அதிலும் சமமான வாக்குளை பெற்றிருந்தால் திருவளை சீட்டு மூலம் போட்டு அதன்படி முடிவு செய்யவேண்டும்.

செயற்குழு கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்களில் யாராவது தகுந்த காரணம்

தெரிவிக்காமல் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வரத்தவறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு (தலைவர், செயலாளர், பொருளாளர்) உரிமை உண்டு.

***<u>கிளை சங்க நிர்வாகக் குழு</u>***:

கிளை சங்க நிர்வாகக் குழு என்பது நிர்வாக்குழு தலைவர், செயலாளர் பொருளாளர், துணணத்தலைவர், இணை செயலாளர், ஆலோசகர்களை கொண்டது. ஆண்டு பொதுக்குழு, செயற்குழுவிற்க்கான நிகழ்ச்சி நிரல், தயாரித்தல், கூட்டத்தை எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதும் பொதுக்குழு மற்றும் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உறுப்பினர்களுக்கு தெரிவித்தல் கிளை சங்க நிர்வாக குழுவின் கடமையாகும்.

கிளை சங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சங்கத்தின் சார்பாக பேச்சு வார்த்தையில் பங்கேற்றல், ஒப்பந்தங்கள் ஈடுபடுதல், ஒப்பந்தங்களின் திருத்தம் செய்தல், கிளை சங்க நிர்வாக குழுவின் உரிமையாகும்.

அனைத்து அசையும், அசையா சொத்துக்களும், கையிருப்புகளும் நிதியும், பங்குகளும், செலவாணிக்கு ஈடான மற்றவைகளும் கிளை சங்க நிர்வக குழு கட்டுபாட்டில் இருக்கும்.

நிர்வாக குழு அங்கீகாரம் இல்லாமல் சங்க சொத்தின் எந்தவொரு பகுதியும் யாருக்கு விற்கப்பட்டமாட்டாது. அடகு வைக்கபட மாட்டாது. அப்படி விற்க நிர்வாக குழு முடிவு செய்தால் பொதுக்குழுவில் உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெற வேண்டும்.

சங்கத்தின் சார்பாக தேவையானது அல்லது அவசியமானது என்று கருதினால் வழக்குகளை தாக்கல் செய்தல் வழக்கை நடத்துதல், அவசியம் என்று கருதினால் சமரசம் செய்துக் கொள்ள கிளை சங்க நிர்வாக குழுவிற்கு உரிமை உண்டு.

அமலில் உள்ள விதிகள் மற்றும் துணை விதிகளுக்கு மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்தல் தொடர்பாக மாநில சங்கத்திற்கு ஆலோசனை வழங்க கிளை சங்க நிர்வாக குழுவிற்கு அதிகாரம் உண்டு. இருந்தாலும் விதிகள் மாற்றம் திருத்தங்களை செய்ய மாநில நிர்வாக குழுவிற்கு மட்டுமே உரிமை உண்டு.

**கிளை சங்க முதன்மை நிர்வாகக் குழு** :

கிளை சங்க முதன்மை நிர்வாகக் குழு என்பது கிளை சங்க தலைவர், கிளை சங்க செயலாளர், கிளை சங்க பொருளாளர் என்ற மூவரையும் உள்ளடக்கியது.

சங்கத்தின் சார்பில் பில்கள் வரவு சீட்டுகள், வவுச்சர்கள் ஒப்பந்தங்கள் மற்றும் பிற ஆவணங்களில் யார் கையெழுத்திடுதல் என்பது தீர்மானித்தல்.

சங்கத்தின் சார்பில் வங்கியில் கணக்கு தொடங்குதல், காசோலையில் கையெழுத்திடுதல் போன்றவற்றை கிளை சங்க தலைவர் மற்றும் கிளை சங்க பொருளாளர் செய்வார்கள். தேவைப்பட்டால் யாராவது இருவர் செய்ல்பட, மற்றவர் ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

கிளை சங்கத்திற்கு தேவையான பணியாட்கள், வேலையாட்கள் நியமிக்கவும், ஊதியம் நிர்ணயம் செய்யவும், தேவைப்பட்டால் பணி நீக்கம் செய்யவும் கிளை சங்க முதன்மை நிர்வாககுழுவிற்கு அதிகாரம் உண்டு. கிளை சங்கத்திற்கு தேவையென்று கருதினால் வழக்கறிஞர்கள், சட்ட ஆலோசகர்கள் ஆண்டுப் பொதுக்குழு கூட்டத்திற்கான கணக்கு மற்றும் அறிக்கை தயாரிக்க ஆடிட்டர் நியமிக்கும் உரிமை உண்டு.

தேவைப்பட்டால் புதிய செயற்குழு உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளும் (அதிகபட்சம் 2பேர்) உரிமை உண்டு. கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு உண்டு. 2 பேருக்கு அதிகமாக நியமிக்க தேவை இருந்தால் கிளை சங்க செயற்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும்.

வரவு – செலவுகளை திட்டமிடுதல், உறுப்பினர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், வியாபாரம் பொருளாதார மேம்பாடு போன்றவற்றிக்கான வழி முறைகளை ஆராய்தல், அதை செயற்குழுவின் ஒப்புதலுடன் நடைமுறை படுத்துதல்.

கிளை சங்க செயற்குழு உறுப்பினர்களை கொண்ட சிறப்புக் குழுக்களை அமைக்கவும், குழுவில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளை பகிர்ந்தளிக்கவும், கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு உரிமையுண்டு. அப்படி அமைக்கப்பட்ட சிறப்பு குழுக்களின் செயல்பாடுகளை பரிந்துரைகளை, அறிக்கைகளை ஏற்க, மாற்ற, திருத்த கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு உண்டு. ஏற்றுக் கொள்ளப்படும் குழுவின் பரிந்துரைகளை செயற்குழுவில் வைத்த ஒப்புதல் பெற வேண்டும்.

மாநில சங்கத்துடன் கருத்து பரிமாற்றம், கடிதப் போக்குவரத்து, ஆலோசனைகள் கூறுதல், அறிக்கைகள், கோரிக்கைகள் வைத்தல் போன்றவை கிளை சங்க முதன்மை நிர்வாகத்தால் மேற்க்கொள்ளப்படும்.

அந்தந்த கிளை சங்கத்தின் சார்பில் மாநில பொறுப்பின் துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கும் மாநில செயற்குழுவிற்க்கும் இடையில் பாலமாக செயல்படுவார்கள் – கிளை சங்கத்தின் பரிந்துரைகளை அந்த அந்த கிளை சங்கத்தை சேர்ந்த மாநிலத் துணை தலைவர் அல்லது மாநில இணைச் செயலாளர் அல்லது இருவருமோ மாநில செயற்குழுவில் எடுத்துரைப்பார்கள் அதேப்போல் மாநில செயற்குழுவின் பரிந்துரைகளை அவர் சார்ந்த கிளை சங்கத்திற்கு அவர்கள் எடுத்துரைப்பார்கள்.

## <u>கிளை சங்க தலைவரின் பணிகளும் அதிகாரங்களும்</u> :

செயற்குழு, நிர்வாக குழு, பொதுக்குழு கூட்டங்களுக்கு தலைவர், தலைமை வகிப்பார் அத்தகைய கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதும் கட்டுபடுத்துவதும் கூட்டங்கள் அமைதியாக நடத்த தேவையான

நடவடிக்கைககளை எடுப்பதும், தலைவர் விரும்பினால் கூட்டத்தை ஒத்திவைக்கவும் அதிகாரம் உண்டு.

கிளை சங்கத்தின் உறுப்பினர்களின் நலன் மற்றும் பயன்களுக்காக எத்தகைய நடைமுறைகளை அமுல்படுத்தும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

சங்கத்தின் வருவாய்க்கான நடைமுறைகளை வகுப்பதற்க்கும் வருவாய் வாய்ப்புகளை கண்டறிவதற்க்கும் அவருக்கு அதிகாரம் உண்டு, சங்கத்தின் நலனுக்காக நிதியாதரங்களுடன் மேம்படுத்த தன் ஆலோசனைகளை செயற்குழுவில் எடுத்துரைத்து செயல்படுத்தும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர்கள், இணைச்செயலாளர்கள், ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள் இவர்கள் பணிகளை சிறப்பாக செய்ய வழிகாட்டவும், செம்மைபடுத்தும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

கிளை சங்க துணைத் தலைவருகளுக்கான பணிகளை ஒதுக்குவதும் தலைவரின் செயலாகும்.

கிளை சங்கத்திற்கு அறக்கட்டளை தொடங்கும் போது கிளை சங்கத் தலைவரே அந்த அறக்கட்டளைக்கு தலைவராக இருப்பார். அந்த அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், தவிர யார் யார் இடம் பெற வேண்டும் என்பதை தலைவர் கிளை சங்க முதன்மை நிர்வாகக் குழுவுடன் ஆலோசித்து முடிவு செய்வார்.

கிளை சங்கத்தை பதிவு செய்யும் உரிமை தலைவருக்கு உண்டு. இப்படி பதிவு செய்யும் போது நிர்வாகக்குழுவை சேர்ந்த 7 பேர் இடம் பெற வேண்டும். மற்றவர்கள் யார் யார் என்பதை கிளை சங்க முதன்மை நிர்வாகக் குழுவுடன் ஆலோசித்து தீர்மானிக்கும் அதிகாரம் தலைவருக்கே உண்டு.

செயற்குழு கூட்டத்திற்கோ, பொதுக்குழு கூட்டத்திற்கோ தலைவர் வர முடியவில்லை என்ற பட்சத்தில் அந்த கூட்டத்திற்கு எந்த துணைத் தலைவர் தலைமை தாங்க வேண்டும் என்பதை தலைவர் முடிவு

செய்வார். அப்படி தெரிவிக்கவில்லை என்றால் மூத்த துணைத் தலைவர் தலைமை வகிப்பார்.

***<u>கிளை சங்க செயலாளர்களின் பணிகள்</u>*** :

*செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்திற்கு பொறுப்பானவர் செயலாளர் ஆவார். செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களை கூட்டுவதும் அதில் கலந்துக் கொண்டு நெறிபடுத்தலும் செயலாளரின் பணியாகும்.*

*கூட்ட நடவடிக்கை குறிப்புகளைப் பதிவு செய்வார். சங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவார். அவசியம் ஏற்படும் போது சிறப்பு செயற்குழு மற்றும் சிறப்பு பொதுக்குழு கூட்டங்களை ஏற்பாடு செய்து தலைவரின் ஒப்புதலுடன் நடத்தலாம்.*

*சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பணிகளை பகிர்ந்தளித்தல், பதிவேட்டை பராமரிப்பது, உறுப்பினர் சேர்த்தல், உறுப்பினர் புதுப்பித்தல், சங்கத்தில் பணிபுரிவோர் மீது தேவையானால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதும். கிளை சங்கத்தின் தினசரி நடவடிக்கை கவனிப்பதும் செயலாளரின் பணியாகும்.*

*செயலாளர் உறுப்பினர்களிடமிருந்து வந்த புகார்களைப் பெற்று பதிவு செய்து செயற்குழு மற்றம் நிர்வாக குழு அறிவுரையோடு அவற்றுக்குத் தீர்வுகளை நடவடிக்கை எடுப்பார்.*

*கிளை சங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்தும் குழு மற்றும் துணைக்குழுவிலும் செயலாளரும் இடம் பெறுவர். அந்த குழுவின் கூட்டத்திலும் பங்கு கொண்டு தன் கருத்தை தெரிவிப்பார்.*

*மாதந்திர, வருட வரவு செலவு கணக்கு அறிக்கையை பொருளாளர் தயாரிக்க உதவுவதோடு அந்த அறிக்கை செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் சமர்ப்பிக்கவும் பொருளாளருக்கு உதவுவார்.*

*மற்ற கிளை சங்கங்கள் மற்றும் மாநில சங்கத்திற்கு கடிதம் எழுதுதல் கடித போக்குவரத்துக்களை அனுப்புதல்*

*செயற்குழு, மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு கடிதம் போக்குவர்த்து செய்தல் செயலாளரின் பணியாகும்.*

*கிளை சங்க இணைச் செயலாளருகளுக்கு பணிகளை பகிர்ந்தளிப்பதும் செயலாளரின் செயலாகும்.*

***<u>கிளை சங்க பொருளாளர்</u>:-***

*கிளை சங்கத்தின் நிதிக்கு பாதுகாவலர் பொருளாளர் ஆவார். அவர் சட்டப்படி கணக்கு பேரேடுகளை பராமரிப்பார்.*

*பொருளாளர் அன்றாட வரவு – செலவு கணக்குகளை கவனிப்பார், பொதுக்குழு, செயற்குழு அல்லது வேறு விதமான சங்க நிகழ்ச்சிக்கு தேவையான நிதி திட்டத்தை தயாரித்து செயற்குழுவில் தாக்கல் செய்து ஒப்புதல் வாங்கிய பிறகு அதை செயல்படுத்துவார்.*

*நன்கொடை, சந்தா வசூலிப்பது, வெவ்வெறு நிகழ்வுகள் மூலம், நிதி ஆதாரத்தை பெருக்குவது, நிதியை பராமரிப்பது போன்றவை பொருளாளர் பணியாகும்.*

*கிளை சங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்து குழு மற்றும் துணைக் குழுவிலும் பொருளாளரும் இடம் பெறுவார். குழுவின் கூட்டங்களிலும் பங்கு கொண்டு தன் கருத்தை தெரிவிப்பார்.*

*அதிகபட்சம் கிளை சங்கத்தின் பொருளாளர் அவசரத் தேவைக்காக ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம்) மட்டும் தன் கையிருப்பாக வைத்துக் கொள்ளலாம்.*

***<u>துணைத்தலைவர் பணிகள்</u>*:**

*துணைத் தலைவர் எல்லா நிகழ்வுகளிலும் தலைவருக்கு உதவியாக இருப்பவர்.*

*தலைவர் கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலையில் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.*

*தலைவரின் வழிகாட்டுதலின் படி அனைத்துப் பணிகளையும் துணைத் தலைவர்கள் ஈடுபடுவர்கள்.*

*கிளை சங்கம் அமைக்கும் சில குழுக்களில் பங்கு ஏற்று தன் ஆலோசனைகளை வழங்கி அதன் செயல்பாடுகளை செம்மைபடுத்துவார்.*

***இணைச்செயலாளர் பணிகள்*** :

*இணை செயலாளர் எல்லா நிகழ்வுகளிலும் செயலாருக்கு உதவியாக இருப்பார் செயலாளரின் வழிகாட்டுதலின் படி அனைத்துப் பணிகளையும் இணை செயலாளர்கள் செய்வார்கள். கிளை சங்கம் அமைக்கும் சில குழுக்களில் பங்கெடுத்து அதன் செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள், செம்மைப்படுத்துவார்கள்.*

## ***கிளை சங்கத் தேர்தல் விதிமுறைகள்*** :

*கிளை சங்க கடைசி செயற்குழு கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்காகன பொதுக்குழு கூட்டத் தேதியை நிர்ணயம் செய்து உரிய தேர்தல் அறிப்பனை உறுப்பினர்களுக்குக் கிளை சங்க செயலாளர் அனுப்புவார்.*

***தலைவர்*** - 1

***செயலாளர்*** - 1

***பொருளாளர்*** - 1

***துணைத் தலைவர்கள்*** - **2**

***இணைச் செயலாளர்கள்*** - **2**

*செயற்குழு உறுப்பினர்கள் (எண்ணிக்கை கிளைக்கு கிளை மாறுபடும் குறைந்த பட்சம் 6 முதல் அதிகபட்சம் 30 பேர் வரை கிளை சங்க செயற்குழு உறுப்பினர்களாக இருக்கலாம்).*

***பதவிக்காலம்*** :

*சங்க பதிவுச் சட்டம் 15-ன்படி, கிளை சங்க நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.*

*வாக்களிக்கும் உரிமை உள்ள உறுப்பினர்களின் பட்டியலை நிர்வாக குழு தேர்தல் தேதிக்கு 7 நாட்களுக்கு முன் வெளியிட வேண்டும்.*

*வாக்களிக்கும் உரிமையுள்ள அனைவரும் தேர்தலில் நிற்க தகுதியுள்ளவர்களாகவே கருதப்படுவார்கள்.*

*தேர்தலில் நிற்பவரை வாக்களிக்கும் தகுதியுள்ள ஒருவர் முன்மொழிந்தும் மற்றோருவர், வழிமொழிந்திருக்க வேண்டும்.*

*சங்கத்திற்கு சந்தா தொகை பாக்கி வைத்திருப்பவர்கள் சந்தா தொகை முழுவதுமாக செலுத்திய பின்னே வாக்களிக்கவோ, தேர்தலில் நிற்கவோ தகுதியுள்ளவராக கருதப்படுவார்.*

*எந்த ஒரு உறுப்பினரும் ஒரு கிளை சங்கத்தில் மட்டும் வாக்களிக்கும் உரிமை பெற்றவராக இருப்பார்.*

*தேர்தலை சிறப்பாக நடத்த 1 தலைமை தேர்தல் அதிகாரியும், 2 உதவி தேர்தல் அதிகரியும் செயற் குழுவால் நியமிக்கப்படுவார்.*

*அந்த தேர்தல் அதிகாரி தேவையென்றால் தேர்தல் நடந்த தேவையான ஊழியர்களை சங்க உறுப்பினர்களிலிருந்து நியமித்துக் கொள்ளலாம்.*

*சங்க நிர்வாகிகளுக்கான வேட்புமனுக்கள் சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அமைய வேண்டும்.*

*வாக்களிக்கும் உரிமை உடைய உறுப்பினர்கள் தானே நேரில் வந்து தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த வேண்டும். தபால் மூலமோ, வேறு ஒருவர் மூலமோ வாக்களிக்க முடியாது.*

*தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிக்கு வேட்புமனு கட்டணமாக ரூ.1000/-ம் துணைத் தலைவர் மற்றும் இணைச் செயலாளர் பதவிக்கு ரூ.500/- வசூலிக்கப்படும்.*

*குறிப்பிட்ட நேரத்திற்க்குள் வேட்பும்னுக்களை வாபஸ் பெற்றால் வேட்புமனு கட்டணம் திருப்பியளிக்கப்படும்.*

இறுதியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை தலைமை தேர்தல் அதிகாரி வெளியிடுவார். போட்டியிருந்தால் தேர்தல் நடத்தப்படும்.

தேர்தல் நடந்தால் அதற்கு தேவையான வாக்குசீட்டு, வாக்குசீட்டு போடும் பெட்டி போன்ற அனைத்தையும் தற்போதைய செயலாளர் தயார் செய்து தேர்தல் அதிகாரியிடம் வழங்குவார். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களருக்கு அதிகபட்சம் 2 நிமிடம் தன் கருத்தைக்களை உறுப்பினர்களுக்கு மேடையில் பேச வாய்ப்பு அளிக்கப்படும். நோட்டீஸ், Flex சுவரில் எழுதுதல் போன்றவைகளை செய்யும் வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

பத்திரிக்கை, தொலைக்காட்சி, வானொலி (Radio) போன்றவற்றில் விளம்பரம் செய்தாலும் தகுதி நீக்கம் செய்யப்படுவார். வாக்குக்கு பணம் கொடுத்தால் தகுதி நீக்கம் மட்டுமின்றி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மாநில சங்க முதன்மை நிர்வாகக் குழுவில் அதிகபட்சம் இருப்பவர் 2 முறை மட்டுமே பதவியில் இருக்கலாம்.

வாக்கு பதிவு முடிந்ததும் தலைமை தேர்தல் அதிகாரி வாக்கு சீட்டுகள் எண்ணும் ஏற்பாடுகளை செய்து, வாக்கு எண்ணப்படும் வாக்கு எண்ணிக்கை முடிந்த்தும் வெற்றி பெற்றவர்களை தலைமை தேர்தல் அதிகாரி அறிப்பார்.

வாக்கு எண்ணிக்கை போது வேட்பாளர்களின் முகவர்கள் உடனிருப்பார்கள் எதாவது தவறு நடந்தால் தலைமை தேர்தல் அதிகாரியிடம் தெரிவித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரே பதவிக்கு இரண்டு வேட்பாளர்கள் சமமான எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்றிருந்தால் வெற்றி பெற்ற வேட்பாளர் யார் என்பதை திருவளை சீட்டு முறை மூலம் தலைமை அதிகாரி தீர்மானிப்பார்.

வேட்புமனு கட்டணமாக வசூலிக்கப்பட்ட பணம் கிளை சங்க கணக்கில் வரவு வைக்கப்படும்.

குறிப்பிட்ட நிர்வாகக்குழு பதவிக்கு யாருமே போட்டியிடவில்லை என்றால் நடப்பு செயற்குழு அந்த பதவிக்கு ஒருவரை நிர்ணயம் செய்து வெற்றி பெற வைக்கலாம். அவரிடம் இருந்து வேட்புமனு கட்டணம் சங்க வளர்ச்சி நிதியாக வசூலிக்கப்படும். செயற்குழு உறுப்பினர் பதவிக்கு தேவையான அளவு உறுப்பினர்கள் போட்டியிடவில்லையேன்றால், புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக்க் குழு தேவையான செயற்குழு உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளலாம்.

வெற்றி பெற்று பதவியில் இருக்கும் எந்த நிர்வாகியோ, நிர்வாகக்குழு உறுப்பினரோ தன் பதவியை ராஜினாமா செய்து, தலைவர் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டப்பிறகே அந்த பதவிக்கு செயற்குழு ஏகமனதாக ஒருவரை தேர்ந்தெடுக்காலாம், அப்படி தேர்ந்தெடுக்க முடியாதபட்சத்தில் செய்ற குழுவில் அதிக எண்ணிக்கை ஆதரவு உள்ளவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

அப்பதவிக்கு செயற்குழு உள்ள யார் வேண்டுமானலும் போட்டியிடலாம். (எடுத்துக்காட்டாக தலைவர், தனது பதவியை ராஜினாமா செய்தால் செயலாளர் முதல் செயற்குழு உறுப்பினர் வரை யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம்.)

கிளை சங்க செயற்குழு உறுப்பினர் ராஜிமானா செய்தால், கிளை சங்க முதன்மை நிர்வாக குழு புதிய செயற்குழு உறுப்பினரை செயற்குழு ஒப்புதலுடன் நியமிக்கலாம். மாநில முதன்மை நிர்வாக குழுவில் பொறுப்பிலிருக்கும் நிர்வாகி கிளை சங்கத்தின் முதன்மை நிர்வாக பொறுப்பை (இரண்டு) வகிக்கக் கூடாது.

கிளை சங்க தலைவர், கிளை சங்க செயலாளர்கள், மற்றும் கிளை சங்க பொருளாளர் அந்த பதவியில் இரண்டு முறைக்கு மேல் இருக்கக் கூடாது. ஆனால் மாநில முதன்மை நிர்வாக குழுவில் உள்ள பதவிக்கு போட்டியிடலாம்.

## மாநில சங்கத்தின் விதிமுறைகளும் அதிகாரங்களும்:

- ❖ கிளை சங்கங்களின் சங்கமம் மாநில சங்கம்.
- ❖ கிளை சங்கங்களை ஒருங்கிணைப்பதும், கிளை சங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதும் மாநில சங்கத்தின் முக்கிய பணியாகும்.
- ❖ கிளை சங்கங்களில் தொய்வு ஏற்பட்டால் அதற்கு தேவையான ஊக்கத்தை அளிப்பதும்.
- ❖ கிளை சங்கங்களால் ஆண்டு பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களை நடத்த முடியாமல் போனால் அதன் காரணங்களை ஆராய்ந்து சரிசெய்து செம்மையாக கிளை சங்கங்கள் நடைப்பெற வழிச் செய்வது.
- ❖ புதிய கிளை சங்கங்களை தோற்றுவித்தல்.
- ❖ ஒட்டுமொத்த நம் சமூக மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது.
- ❖ நம் சமூக மக்களின் பொதுப் பிரச்சனைகளில் நல்ல தீர்வு காண்பது.
- ❖ அரசு, மற்றும் மற்ற பொது அமைப்புகள் தனியார் அமைப்புகளிடமிருந்து நம் சமூக மக்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுத் தருதல்.

ஒவ்வொரு வருடமும் மிக சிறப்பாக செயல்படும் கிளை சங்கங்களைப் பாராட்டி, அந்த கிளை சங்கத்திற்கு விருது வழங்கி ஊக்குவிப்பது.

***மாநில சங்க நிர்வாகிகள்*** :

மாநிலத் தலைவர் - 1

மாநில பொதுச் செயலாளர் - 1

மாநில பொருளாளர் - 1

மாநில துணைத் தலைவர்கள் - 10+1 =11

மாநில இணைச் செயலாளர்கள்– 10 + 1 = 11

சிங்கபூர் கிளை சங்கம் மாநில தேர்தலில் பங்குபெற்று போட்டி போட்டால் 1 இணைச் செயலாளர் பதவி அல்லது துணைத் தலைவர் பதவி அவர்களுக்கு ஒதுக்கப்படும்.

***கூட்டம் நடைமுறை விதிகள்*** :

மாநில நிர்வாக குழு கூட்டம் மாநிலத் தலைவர் தலைமையில் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்ட வேண்டும்.

மாநில நிர்வாக குழு கூட்டம், ஒரே ஊரில் நடத்தப்படாமல் கிளை சங்கங்களின் ஒப்புதலுடன் வெவ்வேறு கிளை சங்கங்களில் நடத்தப்பட வேண்டும். அப்படி நடைபெறும் மாநில நிர்வாக குழு கூட்டத்திற்கு, அந்த ஊரின் கிளை சங்கம் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரவேண்டும். மாநில நிர்வாக குழு கூட்டத்திற்க்கான செலவுகளை மாநில சங்கமே ஏற்க வேண்டும்.

மாநில செயற்குழு கூட்டபட்டாலே மாநில நிர்வாகக் குழு கூட்டமும் சேர்ந்து நடந்ததாகவே கருதப்படும்.

வருடத்திற்கு ஒரு முறை மாநில முதன்மை செயற்குழு கூட்டம், கட்டப்பட வேண்டும். கிளை சங்க முதன்மை நிர்வாகிகளை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து மாநில சங்க மற்றும் கிளை சங்க மேம்பாட்டிற்காக வளர்ச்சிகளை ஆலோசனை கூட்டம் நடைப்பெற வேண்டும்.

## <u>மாநில சங்க செயற்குழு</u> :

மாநில தலைவர், மாநில பொது செயலாளர், மாநில பொருளாளர், மாநில துணைத் தலைவர்கள், மாநில இணைச் செயலாளர்கள் அனைத்து கிளை சங்க முதன்மை நிர்வாக குழுவில் இருப்பவர்கள், மாநில சங்கத்தால் நிர்ணயம் செய்த எண்ணிக்கை தேவையான அளவிற்கு செயற்குழு உறுப்பினர்கள் மாநில சங்க செயற்குழுவில் இடம் பெறுவார்கள்.

## <u>மாநில முதன்மை செயற்குழு</u> :

மாநில முதன்மை செயற்குழு என்பது மாநிலத் தலைவர், மாநில பொதுச் செயலாளர், மாநில செயலாளர், மாநிலத் துணைத்தலைவர்கள், மாநில இணைச் செயலாளர்கள் கிளை சங்கங்களின் முதன்மை நிர்வாகக் குழு நிர்வாகிகள், அதாவது கிளை சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களை உள்ளடக்கியது.

**மாநில நிர்வாக குழு**:

மாநிலத் தலைவர், மாநில பொதுச் செயலாளர், மாநில பொருளாளர், மாநிலத் துணைத் தலைவர்கள், மாநில இணைச் செயலாளர்களை உள்ளடக்கியது மாநில நிர்வாக குழு.

**மாநில சங்க முதன்மை நிர்வாக குழு** :

மாநிலத் தலைவர், மாநில பொதுச் செயலாளர், மாநில பொருளாளர் மூவரையும் உள்ளடக்கியது.

**மாநில சங்க குழுக்கள்**

மாநில சங்கத்தின் நோக்கம் நிறைவேற்ற குழுக்கள் அல்லது பிற சட்டப்பூர்வமான அமைப்புகளை அமைத்து குழுவிற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதும் இந்த குழுவின் தேவையான பொறுப்புகள் வழங்குவது பற்றி மாநில சங்க முதன்மை நிர்வாக குழு முடிவு செய்யும். அந்த குழுக்கள் தங்களது விளக்கங்களையும் செயல்பாட்டையும் மாநில சங்க முதன்மை நிர்வாகக் குழுவிடம் தெரிவிக்கவும் மாநில சங்க முதன்மை நிர்வாகக் குழு தேவையான வழிக்காட்டுதலையும், குழுவின் பரிந்துரையை முழுவதுமாக ஏற்பதும் பகுதியாக ஏற்பதும், நிராகரிப்பதும் மாநில சங்க முதன்மை நிர்வாகிகளுக்கு உரிமை உண்டு. ஏற்க்கப்பட்ட பரிந்துரைகளை மாநில நிர்வாக குழுவில் சமர்பித்து ஒப்புதல் பெற வேண்டும்.

***நிதி***:

*மாநில சங்கம் சட்டபூர்வமாக நிதியைப் பெருக்கிக் கொள்ள உரிமை உண்டு. அந்த வழியில் நிதி ஆதாரத்தை பெருக்குவது என்பதை செயற்குழுவில் பேசி முடிவு செய்ய பட வேண்டும். சங்கத்தின் நிதியை முதலீடு செய்யவோ அல்லது வேறு முறையினால் நிதியை பெருக்கவோ மாநில சங்கத்தின் நிர்வாகக் குழுவிற்கு உரிமையுண்டு. மாநில முதன்மை நிர்வாகக் குழுவால் அமைக்கப்பட்ட நிதி ஆதாரகுழுவும் நிதி நிலைமை பெருக்குவதற்கான உரிமையை மாநில முதன்மை நிர்வாகக் குழு வழங்கும்.*

***நிதி ஆதாரம்*** :

*மாநிலச் சங்கத்தின் செலவினங்களுக்காகவும் வருவாய்க்காகவும் மாநில சங்க நிர்வாகிகள், அந்தந்த கிளை சங்க நிர்வாகிகளுடன் சேர்ந்து அந்த ஊரில் நன்கொடை வசூல் செய்து மாநில சங்கத்தின் நிதி நிலையை உயர்த்தலாம் அதேப்போல் மாநில நிதி ஆதாரக் குழுவை ஏற்ப்படுத்தி அதன் மூலமும் நிதி நிலையை உயர்த்தலாம்.*

***வலையில் மாநில சங்கம்***:

*மாநில சங்கம் தங்களுக்கென* Internet-*ல்* Webpage *உருவாக்கி, நம் சமூக மக்கள் உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நடத்தலாம். அதற்கான குழுவை அமைக்க நிர்வாகக் குழுவுக்கு உரிமை உண்டு. மாநில நிர்வாகத்தின் செயல்பாடுகளையும், மற்ற கிளை சங்கங்களின் சிறப்பான செயல்பாடுகளையும் அதில் தெரிவிக்க வேண்டும்.*

***வாட்ஸ் ஆப் பகரி***:

மாநில சங்க சார்பாக வாட்ஸ் ஆப் குருப்களை ஆரம்பித்து உறுப்பினர்களுக்கு உடனுக்கு உடன் சங்க செய்திகளை சேர்க்கலாம். தேவையில்லாத பதிவுகளை தவிர்க்க வழியுறுத்தவும், தேவையென்றால், குறிப்பிட்ட எந்தவொரு உறுப்பினரை நீக்க, மாநில சங்க முதன்மை குழுவிற்கு உரிமை சங்க உண்டு. அட்மின் யார் யார் என்பதையும் மாநில சங்க முதன்மை நிர்வாக குழு முடிவு செய்யவும்.

***புத்தகம்***:

மாநில சங்கம், நம் சமூக மக்களுக்கு பயன் அளிக்கும் வகை எந்த புத்தங்களையும் வெளியிட உரிமையுண்டு. புத்தகம் எப்படி எப்படியெல்லாம் வர வேண்டும், அதன் ஆசிரியர் யார் என்பதையும் மாநில நிர்வாகக் குழுவில் விவாதித்து செயல்பட வேண்டும்.

***சமூக நலன்***:

மாநில சங்கம் கல்வி, வேலைவாய்ப்பு, வியாபார விருத்தி, பொருளாதார மேம்பாடு, மருத்துவம் என சகலவழிகளும் உதவும் பொருட்டு திட்டங்கள், முகாம்கள், கூட்டங்கள் வழிகாட்டிகளை அமைத்து சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக உறுதுணையாக இருக்க வேண்டும்.

***நிதி ஆண்டு*** :

சங்கத்தின் வரவு – செலவு இருப்புக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1ம் தேதி தொடங்கி அடுத்து வருகிற மார்ச் 31ம் தேதி முடிய பராமரித்து தணிக்கை செய்யவேண்டும்.

***மாநில செயற்குழு*** :

நிர்வாகக்குழுவில் ஆண்டு செயற்குழு நடத்துவதற்கு தேதி நிர்ணயம் செய்த பிறகு தேதி, இடம் தேர்வு

*செய்தபின் குறைந்த்து 21 நாளுக்கு குறையாமல் கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு தெரிவிக்க வேண்டும் மாநில செய்ற்க்குழு நெருங்கும் நேரத்தில் நிர்வாகிகளுக்கு குறுஞ்செய்தி மூலமாகவோ, வாட்ஸ் ஆப் பகரி மூலமாகவோ ஆண்டு பொதுக்குழு நடக்கவிருப்பதை நினைவுப்படுத்தலாம்.*

*ஆண்டு செயற்க்குழு கூட்டத்தில் மாநில சங்கத்தின் முன்னாள் தலைவரை மேடையில் அமர வைக்க வேண்டும். அந்த குறிப்பிட்ட முன்னாள் தலைவர் விரும்பாத பட்சத்தில் அவர் எதிரே இருந்து சங்க செயல்பாடுகளை கவனிக்கலாம்.*

*மாநில சங்க பொது செயலாளர் ஆண்டு அறிக்கை மாநில செயற்க்குழுவில் வாசித்து ஒப்புதல் பெற வேண்டும். மாநில சங்க பொருளாளர், அந்த ஆண்டு வரவு – செலவுகளை மாநில செயற்க்குழுவில் பொருளாளர் வாசித்து மாநில செயற்க்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும்.*

*ஆண்டு மாநிலக் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனைத்தும் கிளை சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில நிர்வாக்குழு உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அல்லது புதிய தொழில் நுட்பம் மூலம் தெரிவிக்க வேண்டும்.*

## ***<u>மாநில சங்க நிர்வாகக் குழு கூட்டம்</u>***:

*மாநில நிர்வாகக்குழு கூட்டத்திற்கு தேவையான குறைந்தபட்ச நிர்வாகிகளின் வருகை 3-ல் 1 பங்கு இருக்க வேண்டும் (33%) இந்த வருகை எண்ணிக்கை எட்டப்படாவிட்டால் எந்த அலுவலும் மேற்கொள்ளப்படாது. அக்கூட்டம் தலைவரால் மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டும்.*

*மாநில நிர்வாகக்குழுவின் அலுவல்கள் நடவடிக்கை குறிப்பேட்டில் விவரமாக பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்படும், நிர்வாககுழு கூட்டத்தில் பராமரிக்கப்படும்,*

மாநில நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள் அனைவரும் அதில் கையொப்பமிட வேண்டும்.

மாநில சங்கத்திற்கு தேவையான அல்லது அவசியமான கட்டிடங்கள், வீடுகள் மற்றும் அசையா சொத்துக்களை வாங்குதல், அவற்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல், அவசியமான பொருட்களையும், சாதனங்களையும் வாங்குதல், கிளை சங்கத்தின் அலுவலகத்திற்க்காக கட்டிடம் வாடகைக்கு எடுத்தல் அவற்றுக்காக ரொக்கமாகவோ பிற வழிகளிலோ பணம் வழங்குதல் என்பது மாநில சங்க நிர்வாகக்குழுவிற்கு உரிமை உண்டு.

மாநில சங்கத்தின் நிதியை முதலீடு செய்யவோ அல்லது வேறு முறையில் கையாண்டு நிதியினை பெருக்க கிளை சங்க நிர்வாகக்குழுவிற்கு உரிமையுண்டு.

மாநில நிர்வாக குழு, மாநில செயற்குழுவில் கொண்டு வரப்படும் எந்தவொரு விஷயத்திலும் பெருபான்மை வாக்குகளின் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்படும், இருதரப்புக்கும் சமமான வாக்குகள் கிடைத்தால், மீண்டும் வாக்களிக்கும் முறை செயல் படுத்த வேண்டும் அதிலும் சமமாக வந்தால் திருவிளை சீட்டு போட்டு தீர்மானிக்க வேண்டும்.

## <u>மாநில முதன்மை செயற்குழு</u> :

மாநில முதன்மை செயற்குழு என்பது ஒவ்வொரு கிளை சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மாநில நிர்வாகிகளை உள்ளடக்கியது. முக்கியமான பொருள் உள்ளடக்கிய விஷயங்களை விவாதிக்க மாநிலத் தலைவர், மாநில முதன்மை செயற்குழு கூட்டி விவாதிக்கிலாம்.

நமது சங்கத்தின் அடிப்படை விதிகளை மாற்றவோ, நீக்கவோ, புதிதாக சேர்க்கவோ, திருத்தம் செய்யவோ மாநில முதன்மை செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு. அடிப்படை விதிகளில் மாற்றமோ, சேர்த்தலோ, நீக்கவோ, மாநில முதன்மை செயற்குழுவின் கூட்டத்திற்கு 3-ல் 1

*பங்கு நிர்வாகிகள் கூட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். மாறுபட்ட கருத்துக்கள் ஏற்படின் வாக்கெடுப்பு மூலம் தீர்வுகாண வேண்டும்.*

*மாநில சங்கத்தால் மாநில மாநாடு போன்ற பெரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் போது மாநில முதன்மை செயற்குழுவில் இருக்கும் நிர்வாகிகளை கலந்து பேசி, பல்வேறு குழுக்களை ஏற்படுத்தி செம்மையாக நடைபெற செய்ய வழி செய்ய வேண்டும்.*

***<u>மாநில சங்க நிர்வாகக் குழு பணிகள்</u>*:**

*ஆண்டு, செயற்குழுவிற்க்கான நிகழ்ச்சி நிரல், தயாரித்தல், கூட்டத்தை எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதும் மாநில மற்றும் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உறுப்பினர்களுக்கு தெரிவித்தல் மாநில சங்க நிர்வாக குழுவின் கடமையாகும்.*

*மாநில சங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சங்கத்தின் சார்பாக பேச்சு வார்த்தையில் பங்கேற்றல், ஒப்பந்தங்கள் ஈடுபடுதல், ஒப்பந்தங்களின் திருத்தம் செய்தவர், மாநில சங்க நிர்வாக குழுவின் உரிமையாகும்.*

*அனைத்து அசையும், அசையா சொத்துக்களும், கையிருப்புகளும் நிதியும், பங்குகளும், செலவாணிக்கு ஈடான மற்றவைகளும் மாநில சங்க நிர்வக குழு கட்டுபாட்டில் இருக்கும்.*

*மாநில சங்கத்தின் சார்பாக தேவையானது அல்லது அவசியமானது என்று கருதினால் வழக்குகளை தாக்கல் செய்தல் வழக்கை நடத்துதல், அவசியம் என்று கருதினால் சமரசம் செய்துக் கொள்ள மாநில சங்க நிர்வாக குழுவிற்கு உரிமை உண்டு.*

***<u>மாநில சங்க முதன்மை நிர்வாகக் குழு பணிகள்</u>*:**

*மாநில சங்க முதன்மை நிர்வாக குழு என்பது மாநில சங்க தலைவர், மாநில சங்க செயலாளர், மாநில சங்க பொருளாளர் என்ற மூவரையும் உள்ளடக்கியது.*

சங்கத்தின் சார்பில் பில்கள் வரவு சீட்டுகள், வவுச்சர்கள் ஒப்பந்தங்கள் மற்றும் பிற ஆவணங்களில் யார் கையெழுத்திடுதல் என்பது தீர்மானித்தல்.

மாநில சங்கத்தின் சார்பில் வங்கியில் கணக்கு தொடங்குதல், காசோலையில் கையெழுத்திடுதல் போன்றவற்றை மாநில சங்க தலைவர் மற்றும் மாநில சங்க பொருளாளர் செய்வார்கள், அல்லது தேவைப்பட்டால் யாராவது இருவர் செயல்பட, மற்றவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மாநில சங்கத்திற்கு தேவையான பணியாட்கள், வேலையாட்கள் நியமிக்கவும், ஊதியம் நிர்ணயம் செய்யவும், தேவைப்பட்டால் பணி நீக்கம் செய்யவும் மாநில சங்க முதன்மை நிர்வாககுழுவுற்கு உண்டு. மாநில சங்கத்திற்கு தேவையென்று கருதினால் வழக்கறிஞர்கள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் செயற்குழு கூட்டத்திற்கான கணக்கு மற்றும் அறிக்கை தயாரிக்க ஆடிட்டர் நியமிக்கும் உரிமை உண்டு.

மாநில சங்க நிர்வாகக்குழு நிர்வாகிளை கொண்ட சிறப்புக் குழுக்களை அமைக்கவும், குழுவில் உள்ளவர்களுக்கு பொறுப்புக்களை வழங்கவும் அந்த சிறப்பு குழுக்களின் பரிந்துரைகள், செயல்பாடுகளை, அறிக்கைகளை ஏற்க, மாற்ற திருத்த மாநில சங்க முதன்மை நிர்வாக குழுவிற்கு உண்டு. ஏற்றுக் கொள்ளப்படும் குழுவின் பரிந்துரைகளை மாநில நிர்வாக குழுவில் வைத்த ஒப்புதல் பெற வேண்டும்.

<u>மாநில சங்க தலைவரின் பணிகளும் அதிகாரங்களும்</u> :

மாநில செயற்குழு, மாநில முதன்மை செயற்குழு, மாநில நிர்வாக குழு, பொதுக்குழு கூட்டங்களுக்கு தலைவர், தலைமை வகிப்பார்.

மாநில சங்கத்தின் வருவாய்க்கான நடைமுறைகளை வகுப்பதற்க்கும் வருவாய் வாய்ப்புகளை கண்டறிவதற்க்கும் அவருக்கு அதிகாரம் உண்டு, மாநில சங்கத்தின் நலனுக்காக நிதியாதரங்களுடன் மேம்படுத்த தன் ஆலோசனைகளை மாநில நிர்வாகக்குழு செயற்குழுவில்

எடுத்துரைத்து செயல்படுத்தும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

பொதுச்செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர்கள், இணைச்செயலாளர்கள், ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள் இவர்கள் பணிகளை சிறப்பாக செய்ய வழிகாட்டவும், செம்மைபடுத்தும் அதிகாரம் தலைவருக்கு உண்டு. மாநில சங்க துணைத் தலைவருகளுக்கான பணிகளை ஒதுக்கவும் தலைவரின் செயலாகும்.

மாநில சங்கத்திற்கு அறக்கட்டளை தொடங்கும் போது மாநில சங்கத் தலைவரே அந்த அறக்கட்டளைக்கு தலைவராக இருப்பார். அந்த அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், தவிர யார் யார் இடம் பெற வேண்டும் என்பதை மாநில தலைவர் முடிவு செய்வார். மாநில சங்கத்தின் முன்னாள் மாநில சங்க முதன்மை நிர்வாகக்குழுவில் இருந்த நிர்வாகிகளும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

மாநில சங்கத்தை பதிவு செய்யும் உரிமை தலைவருக்கு உண்டு. இப்படி பதிவு செய்யும் போது நிர்வாகக்குழுவை சேர்ந்த அனைவரும் பேரும் இடம் பெற வேண்டும். மற்றவர்கள் யார் யார் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் தலைவருக்கே உண்டு.

செயற்குழு கூட்டத்திற்கோ, நிர்வாகக்குழு கூட்டத்திற்கோ தலைவர் வர முடியவில்லை என்ற பட்சத்தில் அந்த கூட்டத்திற்கு எந்த துணைத் தலைவர் தலைமை தாங்க வேண்டும் என்பதை தலைவர் முடிவு செய்வார். அப்படி தெரிவிக்கவில்லை என்றால் மூத்த துணைத் தலைவர் தலைமை வகிப்பார்.

## <u>மாநில சங்க பொது செயலாளரின் பணிகள்</u> :

மாநில செயற்குழு மற்றும் மாநிலக்குழு நிர்வாகிகள் கூட்டத்திற்கு பொறுப்பானவர் செயலாளர் ஆவார். மாநில செயற்குழு, நிர்வாகக்குழு கூட்டங்களை கூட்டுவதும் அதில்

கலந்துக் கொண்டு நெறிபடுத்தலும் பொதுச் செயலாளரின் பணியாகும்.

செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு கூட்ட நடவடிக்கை குறிப்புகளைப் பதிவு செய்வார். மாநில சங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவார். அவசியம் ஏற்படும் போது சிறப்பு செயற்குழு மற்றும் சிறப்பு நிர்வாகக்குழு கூட்டங்களை ஏற்பாடு செய்து தலைவரின் ஒப்புதலுடன் நடத்தலாம்.

மாநில சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பணிகளை பகிர்ந்தளித்தல், பதிவேட்டை பராமரிப்பது, உறுப்பினர் சேர்த்தல், உறுப்பினர் புதுப்பித்தல், சங்கத்தில் பணிபுரிவோர் மீது தேவையானால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதும். மாநில சங்கத்தின் தினசரி நடவடிக்கை கவனிப்பதும் பொது செயலாளரின் பணியாகும்.

மாநில செயலாளர் கிளை சங்கத்திலிருந்து வந்த கடிதங்களைப் பெற்று பதிவு செய்து நிர்வாக குழு அறிவுரையோடு அவற்றுக்குத் தீர்வுகளை நடவடிக்கை எடுப்பார்.

மாநில சங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்துக் குழு மற்றும் துணைக்குழுவிலும் மாநில பொதுச் செயலாளரும் இடம் பெறுவர். அந்த குழுவின் கூட்டத்திலும் பங்கு கொண்டு தன் கருத்தை தெரிவிப்பார்.

கிளை சங்கங்கள் மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு கடிதம் எழுதுதல் கடித போக்குவரத்துக்களை அனுப்புதல் செயற்குழு, மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு கடிதம் போக்குவர்த்து செய்தல் செயலாளரின் பணியாகும். மாநில சங்க இணைச் செயலாளருகளுக்கு பணிகளை பகிர்ந்தளிப்பதும் மாநில செயலாளரின் செயலாகும்.

<u>மாநில சங்க பொருளாளர்</u>:-

மாநில சங்கத்தின் நிதிக்கு பாதுகாவலர் பொருளாளர் ஆவார். அவர் சட்டப்படி கணக்கு பேரேடுகளை பராமரிப்பார்.

மாநில பொருளாளர் அன்றாட வரவு – செலவு கணக்குகளை கவனிப்பார், நிர்வாகக்குழு, செயற்குழு அல்லது வேறு விதமான சங்க நிகழ்ச்சிக்கு தேவையான நிதி திட்டத்தை தயாரித்து செயற்குழுவில் தாக்கல் செய்து ஒப்புதல் வாங்கிய பிறகு அதன்படி செயல்படுத்துவார்.

நன்கொடை, சந்தா வசூலிப்பது, வெவ்வெறு நிகழ்வுகள் மூலம், நிதி ஆதாரத்தை பெருக்குவது, நிதியை பராமரிப்பது போன்றவை பொருளாளர் பணியாகும்.

மாநில சங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்து குழு மற்றும் துணைக் குழுவிலும் பொருளாளரும் இடம் பெறுவார். குழுவின் கூட்டங்களிலும் பங்கு கொண்டு தன் கருத்தை தெரிவிப்பார்.

அதிகபட்சம் மாநில சங்கத்தின் பொருளாளர் அவசரத் தேவைக்காக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) மட்டும் தன் கையிருப்பாக வைத்துக் கொள்ளலாம்.

**<u>துணைத்தலைவர் பணிகள்</u>**:

துணைத் தலைவர் எல்லா நிகழ்வுகளிலும் தலைவருக்கு உதவியாக இருப்பவர்.

தலைவர் கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலையில் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

தலைவரின் வழிகாட்டுதலின் படி அனைத்துப் பணிகளையும் துணைத் தலைவர்கள் ஈடுபடுவர்கள்.

கிளை சங்கம் அமைக்கும் சில குழுக்களில் பங்கு ஏற்று தன் ஆலோசனைகளை வழங்கி அதன் செயல்பாடுகளை செம்மைபடுத்துவார்.

**<u>இணைச்செயலாளார் பணிகள்</u>** :

மாநில செயலாளரின் வழிகாட்டுதலின் படி அனைத்துப் பணிகளையும் இணை செயலாளர்கள், செய்வார்கள். சங்கம் அமைக்கும் சில குழுக்களில் பங்கெடுத்து அதன் செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள், செம்மைப்படுத்துவார்.

**நடவடிக்கை :**

*மாநில சங்க செயற்குழு உறுப்பினர்கள், மாநில சங்க நிர்வாகிகள் மேல் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மாநில சங்க முதன்மை நிர்வாகிகளுக்கு உண்டு, அல்லது அந்த நடவடிக்கை எடுக்க மாநில சங்க முதன்மை நிர்வாகக்குழு ஒரு குழு அமைத்தும் விசாரிக்கலாம்.*

*அதே சமயம் மாநில சங்க முதன்மை நிர்வாகி குழுவின் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்படின் மற்ற மாநில முதன்மை நிர்வாகிகளுடன் நிர்வாக குழுவை சேர்ந்தவர்களை சேர்த்து குழு அமைத்து அதைப்பற்றி விசாரிக்கும் உரிமை உண்டு. தேவையென்றால் முன்னாள் மாநில முதன்மை நிர்வாக குழுவின் நிர்வாகிகளை அவர்களின் சம்மதத்துடன் அந்த குழுவில் நியமிக்கலாம்.*

*ஒரே நேரத்தில் மாநில சங்க முதன்மை நிர்வாக குழுவில் 3 பேரின் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மாநில முதன்மை செயற்க் குழுவிற்கு தெரிவித்து மாநில சங்கத்தின் மூலம் நடவடிக்கை குழுவை ஏற்படுத்தலாம்.*

*மாநில சங்கத்தின் முன்னாள் மாநில சங்க முதன்மை நிர்வாகிகள் 50%, மற்றும் தற்போது உள்ள மூத்த மாநில நிர்வாகிகள் 50% என ஒரு குழுவை அமைத்து விசாரிக்கலாம்.*

## ***மாநில சங்கத தேர்தல் விதிமுறைகள்*:**

*மாநில சங்க பதவிக்காலம் முடிவதற்கு முன் நடைப்பெறும் மாநில நிர்வாக குழு கூட்டத்தில் புதிய மாநில நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க தேர்தலுக்கான பொதுக்குழு கூட்டத் தேதியை நிர்ணயம் செய்து உரிய தேர்தல் அறிப்பனை செயற் உறுப்பினர்களுக்கு கிளை சங்க நிர்வாகிகளுக்கு மாநில பொதுச் செயலாளர் அறிவிப்பார்.*

*சங்க பதிவுச்சட்டம் 15ன் படி மாநில நிர்வாக குழுவின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் மட்டும்*

அசாதாரண சூழ்நிலையில் மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் அதிகபட்சம் 6 மாதங்கள் தேர்தலை தள்ளிவைக்க முடியும். அந்த ஆறு மாதத்திற்கு தற்போதைய நிர்வாகிகளே தொடர்வார்கள்.

தேர்தல் தேதிக்கு 7 நாட்களுக்கு முன் வாக்களிக்கும் உரிமை உள்ளவர்களின் வாக்காளர் பட்டியலை தயார் செய்து வெளியிட வேண்டும். வாக்களிக்கும் உரிமையுள்ளவரை தேர்தலில் நிற்கும் உரிமை உள்ளவராக இருப்பர்.

கிளை சங்கங்களின் (ஊர் வாரியாக) வாக்கு அளிக்கும் உரிமை உள்ளவர்களின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| கீரமங்கலம் | - | 20+3 |
| பட்டுக்கோட்டை | - | 40+3 |
| புதுக்கோட்டை | - | 15+3 |
| பேராவூருணி | - | 15+3 |
| சென்னை | - | 15+3 |
| அறந்தாங்கி | - | 15+3 |
| கொத்தமங்கலம் | - | 6+3 |
| ஆலங்குடி | - | 6+3 |
| தஞ்சாவூர் | - | 6+3 |
| அனவயல் | - | 6+3 |
| பாப்பாநாடு | - | 6+3 |
| வலங்கை மான் | - | 6+3 |
| திருப்பூர் | - | 6+3 |
| சிங்கப்பூர் | - | 6+3 |
| திருச்சி | - | 6+3 |

மொத்தம் வாக்குகள் எண்ணிக்கை } 219

**<u>பதவி எண்ணிக்கைகள்</u>**:

| | |
|---|---|
| மாநில தலைவர் | -1 |
| மாநில பொதுச் செயலாளர் | -1 |
| மாநில பொருளாளர் | -1 |

மாநில துணைத் தலைவர்கள் - 10 + 1
மாநில இணைச் செயலாளர்கள் - 10 + 1

துணைத் தலைவர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் பதவிக்கு ஊர்வாரியக பதவிகளின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1 | பட்டுக்கோட்டை | 3 | ( 1 – து.த – 2 – இ - செ) |
| 2 | கீரமங்கலம் | 2 | ( 1 – து.த – 1 – இ - செ) |
| 3 | புதுக்கோட்டை | 2 | ( 1 – து.த – 1 – இ - செ) |
| 4 | அறந்தாங்கி | 2 | ( 1 – து.த – 1 – இ - செ) |
| 5 | சென்னை | 2 | ( 1 – து.த – 1 – இ - செ) |
| 6 | பேராவூருணி | 2 | ( 1 – து.த – 1 – இ - செ) |
| 7 | கொத்தமங்கலம் | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 8 | ஆலங்குடி | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 9 | அனவயல் | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 10 | தஞ்சாவூர் | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 11 | பாப்பா நாடு | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 12 | வலங்கைமான் | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |
| 13 | திருப்பூர் | 1 | ( 1 – து.த – or 1 – இ - செ) |

| | | | |
|---|---|---|---|
| 14<br>15 | சிங்கப்பூர்<br>திருச்சி | 1<br>1 | ( 1 – து.த – or 1 – இ - செ) ( 1 – து.த – or 1 – இ - செ) |

(ஒரு மாநில பதவியை மட்டும் வகிக்கும் கிளை ஊரு சங்கங்களுக்கு (7 to 14) துணைத் தலைவர் பதவியும் இணைச் செயலாளர் பதவியும் மாறி மாறி அளிக்கப்பட வேண்டும்).

மாநில தலைவர், மாநில பொதுச் செயலாளர் மாநில பொருளாளார் பதவிக்கு மாநில தேர்தலில் வாக்களிக்க உரிமையுள்ள எவரும் போட்டியிடலாம்.

மாநில தலைவர், மாநில பொதுச் செயலாளர், மாநில பொருளாளர் பதவிக்கு ஒவ்வொரு கிளையில் இருந்து ஒரு பதவிக்கு ஒருவரை மட்டுமே பரிந்துரை செய்ய முடியும்.

போட்டியிடும் வேட்பாளர்களை அந்த எந்த கிளை சங்கத்தின் உறுப்பினராக உள்ளாரோ. அந்த சங்கத்தின் தலைவர் முன்மொழிய, செயலாளர் வழி மொழிய வேண்டும். தலைவரோ, செயலாளரோ வர இயலாத பட்சத்தில் அந்த கிளையின் நிர்வாக குழுவை சேர்ந்தவர்கள் முன்மொழியலாம், வழிமொழியலாம்.

மாநில முதன்மை நிர்வாகிகள் பொறுப்புக்கு ஒருவர் இரண்டு முறை மட்டும் பதவி வகிக்க முடியும்.

மாநில சங்கத்தின் நிர்வாகிகளாக இருக்கும் துணைத் தலைவர் மற்றும் மாநில இணைச் செயலாளர்கள் இரண்டு முறை மட்டுமே பதவி வகிக்க முடியும். ஆனால் அவர்கள் மாநில முதன்மை நிர்வாகிகள் பதவிக்கு போட்டியிடுவதில் எந்த தடையும் இல்லை.

மாநில முதன்மை நிர்வாகியாக தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகி கிளை சங்க முதன்மை நிர்வாகியாக பதவி வகிக்க முடியாது, அப்படி பதவியில் இருந்தால் எதாவது ஒரு பதவியை ராஜினாமா செய்து ஒரு பதவியில் தான் தொடர முடியும். அந்த நிர்வாகி தலைவர், செயலாளர்,

*பொருளாளர் பதவியை தவிர்த்து வேறு பதவியில் இருப்பவர்களுக்கு இந்த தடையில்லை.*

*மாநில சங்க நிர்வாகிகளுக்கான வேட்புமனுக்கள் மாநில சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தான் பூர்த்தி செய்து தரவேண்டும்.*

*வாக்களிக்கும் உரிமை உடைய செயற்குழு உறுப்பினர்கள் தானே நேரில் வந்து வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த வேண்டும். தபால் மூலமோ, வேறு ஒருவர் மூலமோ வாக்களிக்க முடியாது.*

*மாநில சங்க தேர்தலை சிறப்பாக நடத்த 1 தலைமை தேர்தல் அதிகாரியும் அவருக்கு உதவ 2 உதவி தேர்தல் அதிகாரியும் மாநில நிர்வாக்க் குழுவால் நியமிக்கப்படுவார் அந்த தலைமை தேர்தல் தேவையென்றால் தேர்தல் நடத்த தேவையான ஊழியர்களை நியமித்துக் கொள்ளலாம்.*

**<u>வேட்புமனு கட்டணம்</u>**:

*மாநில தலைவர், மாநில செயலாளர், மாநில பொருளாளர் பதவிக்கு ரூ.5000/- ம் துணைத் தலைவர்கள், இணை செயலாளர்கள் பதவிக்கு ரூ.2,500/- கட்டணமாக வசூலிக்கப்படும் வேட்புமனுவை வாபஸ் பெற்றால் வேட்புமனு கட்டணம் திருப்பி அளிக்கப்படும்.*

*மாநில தலைவர், மாநில செயலாளர், மாநில பொருளாளர் பதவிக்கு போட்டி இருக்குமாயின் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருக்கும் தன் கருத்துக்களை பேச மேடையில் பேச இரண்டு நிமிடங்கள் பேச வாய்ப்பு அளிக்கப்படும்.*

*மாநில தலைவர், மாநில செயலாளர் மாநில பொருளாளர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிப் பெற்று ஏதோ ஒரு காரணத்தால் தன் பதவியை ராஜினமா செய்தால், அடுத்த வரும் தேர்தல்களில் அவர் பொருளாளர், தலைவர், செயலாளர் மூன்று பதவிக்கும் போட்டியிட முடியாது.*

*மாநில துணைத்தலைவர்கள் மற்றும் மாநில இணைச் செயலாளர்கள் பதவிக்கு, அந்தந்த கிளை*

சங்கங்கள், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட எண்ணிக்கைபடி கிளை சங்க நிர்வாக குழு ஒப்புதலுடன் தேர்ந்தெடுத்து அவர்களை மாநில தேர்தலில் நிற்க வைக்கலாம்.

இறுதியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி வெளியிடுவார் போட்டியிருந்தால் வாக்கு பதிவு நடைப்பெறும், அப்படி தேர்தல் நடந்தால் அதற்கு தேவையான வாக்குசீட்டு, வாக்குசீட்டு போடும் பெட்டி போன்ற வாக்கு பதவிக்கு தேவையான அனைத்தையும் தற்போதை மாநில நிர்வாக குழு தயார் செய்து தலைமை தேர்தல் அதிகாரியிடம் வழங்க வேண்டும்.

வாக்கு பதிவு முடிந்ததும் தலைமை தேர்தல் அதிகாரி வாக்கு எண்ணும் ஏற்பாடுகளை செய்து வாக்கு எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கை முடிந்ததும் ஒவ்வொரு பதவிக்கும் அதிக வாக்குகள் பெற்றவர்களை வெற்றிப் பெற்றவர்களாக தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பார்.

வாக்கு எண்ணிக்கையின் போது வேட்பாளர்களின் முகவர்கள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார். (1 வேட்பாளருக்கு 1 முகவர் மட்டும்).

இரண்டு வேட்பாளர்கள் சம்மான எண்ணிக்கையில் வாக்குகளை பெற்றிருந்தால் வெற்றி பெற்ற வேட்பாளர் யார் என்பதை திருவளை சீட்டு முறை மூலம் தலைமை தேர்தல் அதிகாரி தீர்மானிப்பார்.

வேட்புமனு கட்டணமாக வசூலிக்கப்பட்ட பணம் மாநில சங்க கணக்கில் வரவு வைக்கப்படும்.

வெற்றிப் பெற்று பதவியில் இருக்கும் மாநில முதன்மை நிர்வாகி தன் பதவியை ராஜினாமா செய்தால் (அதாவது தலைவர், செயலாளர், பொருளாளர்) மாநில நிர்வாக குழுவில் உள்ள ஒருவரை ஒரு மனதாக அந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கலாம்.

அப்படி ஒரு மனதாக தேர்ந்தெடுக்க முடியாத பட்சத்தில் மாநில நிர்வாக முழு உறுப்பினர்க்குள் தேர்தல் வைத்து அதிக எண்ணிக்கைப் பெரும் நபரை அந்த பதவிக்கு தேர்ந்தெடுக்க வேண்டும்.

*அந்த பதவிக்கு மாநில நிர்வாக்க் குழுவில் உள்ள யார் வேண்டுமானாலும் அந்த பதவிக்கு போட்டியிடலாம்.*

*அதே சமயம் மாநிலத் துணை தலைவர், மாநில இணை செயலாளர் ஒருவர் தன் பதவியை ராஜினாமா செய்தால் அவர் எந்த கிளை சங்கத்தை சேர்ந்தவரோ அந்த கிளை சங்கத்திற்கு அவரது ராஜினாமாவை தெரிவித்து, அந்த கிளை சங்கத்திலிருந்தே அதே பொறுப்புக்கு புதிய ஒருவரை கிளை சங்க முதன்மை நிர்வாகக் குழு தேர்ந்தெடுத்து மாநில சங்கத்திற்கு தெரிவிக்கும், அதை மாநில சங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

***தொகுப்பு:***
**S.V. *சோலைராஜா, மாநில பொருளாளர்.***